ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ நீணாகம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நீணாகம் ॥

கண்ணனைக் காணாக் கண் முதலியன பயனில எனல்

‡நீணாகம் சுற்றி⋆ நெடு வரை நட்டு⋆ ஆழ் கடலைப்
பேணான் கடைந்து⋆ அமுதம் கொண்டுகந்த பெம்மானை⋆
பூணார மார்வனைப்⋆ புள்ளூரும் பொன் மலையை⋆
காணாதார் கண் என்றும்⋆ கண்ணல்ல கண்டாமே (1)

நீள்வான் குறள் உருவாய்⋆ நின்றிரந்து மாவலி மண்⋆
தாளால் அளவிட்ட⋆ தக்கணைக்கு மிக்கானை⋆
தோளாத மாமணியைத்⋆ தொண்டர்க்கினியானை⋆
கேளாச் செவிகள்⋆ செவியல்ல கேட்டாமே (2)

தூயானைத்⋆ தூய மறையானை⋆ தென்னாலி
மேயானை⋆ மேவாள் உயிருண்டமுதுண்ட
வாயானை⋆ மாலை வணங்கி⋆ அவன் பெருமை
பேசாதார்⋆ பேச்சென்றும்⋆ பேச்சல்ல கேட்டாமே (3)

கூடா இரணியனைக்⋆ கூருகிரால் மார்விடந்த⋆
ஓடா அடல் அரியை⋆ உம்பரார் கோமனை⋆
தோடார் நறுந் துழாய் மார்வனை⋆ ஆர்வத்தால்
பாடாதார் பாட்டென்றும்⋆ பாட்டல்ல கேட்டாமே (74)

மையார் கடலும்⋆ மணி வரையும் மா முகிலும்⋆
கொய்யார் குவளையும் காயாவும்⋆ போன்றிருண்ட
மெய்யானை⋆ மெய்ய மலையானைச்⋆ சங்கேந்தும்
கையானை⋆ கை தொழா⋆ கையல்ல கண்டாமே (5)

கள்ளார் துழாயும்⋆ கணவலரும் கூவிளையும்⋆
முள்ளார் முளரியும்⋆ ஆம்பலுமுன் கண்டக்கால்⋆
புள்ளாய் ஓர் ஏனமாய்ப்⋆ புக்கிடந்தான் பொன்னடிக்கென்று⋆
உள்ளாதார் உள்ளத்தை⋆ உள்ளமாக் கொள்ளோமே (6)

கனையார் கடலும்⋆ கருவிளையும் காயாவும்⋆
அனையானை⋆ அன்பினால் ஆர்வத்தால்⋆ என்றும்
சுனையார் மலர் இட்டுத்⋆ தொண்டராய் நின்று⋆
நினையாதார் நெஞ்சென்றும்⋆ நெஞ்சல்ல கண்டாமே (7)

வெறியார் கருங்கூந்தல்⋆ ஆய்ச்சியர் வைத்த⋆
உறியார் நறு வெண்ணெய்⋆ தானுகந்துண்ட
சிறியானை⋆ செங்கண் நெடியானைச்⋆ சிந்தித்து⋆
அறியாதார்⋆ என்றும் அறியாதார் கண்டாமே (78)

தேனோடு வண்டாலும்⋆ திருமாலிருஞ்சோலை⋆
தான் இடமாக் கொண்டான்⋆ தட மலர்க் கண்ணிக்காய்⋆
ஆன் விடை ஏழ் அன்றடர்த்தாற்கு⋆ ஆள் ஆனார் அல்லாதார்⋆
மானிடவர் அல்லர் என்று⋆ என் மனத்தே வைத்தேனே (9)

‡மெய்ந் நின்ற⋆ பாவம் அகல⋆ திருமாலைக்
கைந் நின்ற ஆழியான்⋆ சூழும் கழல் சூடி⋆
கைந் நின்ற வேற்கைக்⋆ கலியன் ஒலி மாலை⋆
ஐயொன்றும் ஐந்தும்⋆ இவை பாடி ஆடுமினே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥